**அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவை செயற்குழுக்கம் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்குரிய அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவை செயற் குழுக்களிற்குரியதாக வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த 29 செயற்குழுக்களிற்காகவும் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் பின்வருமாறு.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 25 கமநல சேவை செயற்குழுக்களிற்குரியதாக நிதிக்கூற்றுத் தொகுயில் உள்ளடங்க வெண்டிய அங்கமொன்றான மூலத்தனத்தில் மாற்றங்கள் கூற்றை சமர்ப்பித்திருக்கவிலலை. | எதிர்வரும் ஆண்டில் மூலத்தனத்தில் மாற்றங்கள் கூற்றுடன் கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்க நடவடிடிக்கை எடுக்கிறேன். | அனைத்து அங்கங்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவை செயற்குழுக்களிற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது சேனக்குடிரிப்பு கமநல சேவை செயற்குழுவினால் நிர்மாணிக்கப்பட்ட அலுவலக கட்டிடம் மற்றும் மலசலகூடத்தின் மற்றும் நிந்தவூர் கமநல சேவை செயற்குழுவினால் நிர்மாணிக்கப்பட்ட கலந்துரையாடல் மண்டபத்தில் மொத்த பெறுமதியான | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்கிறேன். | இந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 3,118,092 மூலதனமாக்ககப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 06 கமநல செயற்குழுக்களிற்கு உரியதாக நிதி நிலைமை கூற்றினுள் பெற வேண்டிய ஏக்கர் வரி ரூபா 1,413,868 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2015 முதல் 2021 வரை பெற வேண்டிய ஏக்கர் வரி தொகையான ரூபா 88,618 கணக்கீடு செய்யப்படடுள்ளது. | பெற வேண்டிய மொத்த ஏக்கர் வரி தொகையை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 06 கமநல செயற்குழுக்களிற்கு உரியதாக அலுவலக கட்டிடங்களிற்கு பூச்சு பூசுதல், திரை சீலை கொள்வனவு செய்தல், கணனி திருத்துதல் கிரயம் மற்றும் யானை வேலி அமைத்தல் போன்ற மீண்டெழும் செலவின கூட்டுத்தொகை ரூபா 530,207 தொகை மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பூச்சு பூசுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 24,290 தொகையை எதிர் வரும் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்கிறேன். | இந்த பெறுமதியை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | 03 கமநல சேவை செயற்குழுவினால் 03 ஆண்டுகள் முதல் 17 வரை செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் கூட்டுத்தொகை ரூபா 149,200 தொகையினை அட்டுறு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது சரி செய்கிறேன். | செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்ணத்தை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 02 கமநல செயற்குழுக்களிற்கு உரியதாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு வகையான செயற்கை பசளை மற்றும் MOP பசளை இருப்பின் பெறுமதி ரூபா 269,591 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவிலலை. | பதில் வழங்கப்படவில்லை | ஆண்டு இறுதியில் உள்ளவாறான இருப்பு பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | காரைத்தீவு கமநல சேவை செயற்குழுவின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களில் மொத்த பெறுமதி ரூபா 8,461,122 ஆன போதும் ரூபா 4,520,521 ஆக ரூபா 3,940,601 தொகை குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக பெறுமதியை கணக்கிட வேண்டும். |
| (ஏ) | உஹன கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானமான ரூபா 432,500 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் வரும் கணக்கு அறிக்கைகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்கிறேன். | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யும் போது ஆண்டிற்குரிய வட்டி வருமானத்தை கணக்கீடு செய்ய வெண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 279,536 இனால் | 2023 ஆண்டின் போது சரி செய்கிறேன். | ஆண்டு இறுதியில் பெற வேண்டிய பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | மாத்திரம் இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டினுள் செயற்குழு கட்டிடத்திற்கு பூச்சு பூசும் செலவினம் ரூபா 229,330 இனை மீண்டுவரும் செலவினமாக இனங்காணாது காணி மற்றும் கட்டடிங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் போது சரி செய்கிறேன். | பூச்சு பூசும் செலவினம் மீண்டுவரும் செலவினமாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஓ) | கமநல சேவை ஆணையாளரினால் ஹிங்குரான கமநல செயற்குழுவிற்கு வழங்கியுள்ள குப்போட்டா டிரெக்டர் வண்டியை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் ஏலவிற்பனை செய்திருந்த போதும் குறித்த டிரெக்டர் வண்டிக்காக செலுத்த வேண்டியதாக கமநல சேவை ஆணையாளரின் பெயரில் ரூபா 644,020 தொகை நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கறிக்கை மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | மீளாய்வாண்டு இறுதியில் குறித்த டிரெக்டர் வண்டிக்காக செலுத்த வேண்டியதாக காண்பித்துள்ள கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2007 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி விபரத்தின் பிரகாரம் மீதி காசுப் புத்தக மீதியின் பிரகாரம் வித்தியாசம் என ரூபா 1,341,107 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கமநல வங்கி ஐந்தொகையினுள் காண்பித்துள்ள போதும் அவ் வித்தயாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு அதனை தீர்த்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஐந்தொகையின் வித்தியாசத்திற்கான காரணத்தை வெளிப்படுத்திக் கொண்டு அப் பெறுமானத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | சோளம் பயிர் செய்கைக்கு விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட யூரியா பசளை இருப்பிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி இருப்பின் பெறுமதி, வியாபார கணக்கு மற்றும் நிதி நிலைமை கூற்றினுள் ரூபா 488,961 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் கணக்கறிக்கையுடன் சீராக்குகிறேன். | மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறான சரியான இருப்பு பெறுதமதி கணக்கீடு செய்ய வெண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 34 கணக்கு உருப்படிகளின் நேரொத்த அறிக்கை | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | இணங்காமைக்கான காரணங்கள் பரீட்சித்து விரைவில் சரிசெய்ய |

| | | |
|---|---|---|
| மீதிகள் மற்றும் நிதிக்கூற்று மீதிகளிற்கிடையில் ரூபா 8,394,518 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.4 தொங்கள் கணக்கு

| விடயம் | தொகை | தொங்களாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 05 கமநல சேவை செயற்குழுக்குரியதாக நிதிக்கூற்றுக்களில் 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சினுள் 08 தொங்கள் கணக்கு மீதிகளை சரிசெய்ய செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | 1,383,263 | 06 ஆண்டுகள் முதல் 12 வரை | எதிர்கால கணக்கு அறிக்கைகளில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | தொங்கல் கணக்கில் குறித்த கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 95,987,037 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளிற்காக சான்றுகள் மற்றும் தகவல்கள் இல்லாதமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | இந்த மீதிகளை உறுதி செய்ய கொள்ளக் கூடிய எவ்வித ஆவனங்களும் அலுவலகத்தினுள் இல்லாத காரணத்தால் கணக்காய்விற்கு சமர்பிக்க முடியவில்லை. எழுத்து மூல சான்றுகளை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. முன் நடவடிக்கை எடுக்க கமநல பிரதி ஆணையாளரிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் கடிதம் மற்றும் சரியான அறிவுறுத்தல்கள் கிடைத்த பின்னர் அந்த மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்வதற்கு தேவையான சான்றுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) | 32 மற்றும் 33 ஆம் பிரிவுகள் | அட்டாலச்சேனை கமநல சேவை அதிகார பிரதேசத்தில் அனுமதியின்றி நிரப்பிய 32 ஏக்கர்கள் வயல் காணியில் பயிர் செய்வதற்கு நீதிமன்றம் கட்டளை இட்டிருந்த 16 ஏக்கர் அளவை பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் குறித்த காணிகளில் பயிர்செய்கை செய்யாத விவசாய்களிற்கு மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | அந்த 16 ஏக்கர் வயல் காணிகளை பயிர்செய்கை செய்ய தேவையான துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 53 (1) பிரிவு | 14 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 2020 முதல் 2022 வரை வயல்காணி பெயர் பட்டியல் திருத்துவதற்காக 2280 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதும் 1600 விண்ணப்பங்களை மாத்திரமே திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். | தேவையான் திருத்தங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | 56 (4) பிரிவு | பெறுமதி ரூபா 4,672,144 ஆன ஏக்கர் வரி செலுததுவதை புறக்கணித்துள்ள நபர்கள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் 02 செயற்குழுக்களினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புறக்கணிப்பவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 110 | நிதிப்பிரமாணம் பிரகாரம் சேதம் மற்றும் நட்ட பதிவேடொன்று பேணிச் செல்லப்படடிருக்கவில்லை. | சேதம் மற்றும் நட்ட பதிவேடொன்றை பேணிச் செல்ல இணங்குகிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 316 | அரச நிதி மற்றும் நிதிசார் பெறுமதிகளை காண்பிக்கப்படும் பத்திரிகைகள் மற்றும் படிவங்களை பயன்படுத்தும் நிறுவனங்களினால் அப் பணம் அல்லது பத்திரங்களை பாதுகாப்பாக சேப்பு பெட்டியொன்றில் அல்லது பாதுகாப்பான பெட்டியொன்றில் அல்லது பாதுகாப்பான அறையொன்றில் வைக்க வேண்டிய போதும், மஹஓயா மற்றும் மடானகம கமநல வங்கிகளினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | <u>மடானகம</u><br>மதிதிய நலையத்தில காணப்படும் இட வசதிகள் பிரகாரம் பாதுகாப்பான பூட்டு திறப்புகள் இடப்பட்டு பாதுகாப்பாக உள்ளதாகவும் எதிர்காலத்தில் மேலும் பாதுகாப்பாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கிறேன்.<br><br><u>மஹஓயா</u><br>ஏற்றுக்கொள்கிறேன்.<br>எதிர்வரும் ஆண்டின் போது சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள் | | | |
| (i) | 1981 ஒக்டோம்பர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றிக்கை. | | | |
| | 17(3)(உ) | கொள்வனவு செய்த பொருட்கள் இருப்பை புத்தகங்களில் உட்படுத்தி ஏற்றுக் கொண்டதாக இருப்புப் பொறுப்பாளரினால் வழங்கப்படும் சான்றிதழை வவுச்சரில் இணைத்து, இருப்பு புத்தகத்தின் பக்க | <u>ஹிங்குரானா</u><br>பதில் வழங்கப்படவில்லை.<br><br><u>மதானகம</u><br>ஏற்றுக் கொள்கிறேன். 2023 ஆண்டில் சரி செய்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணை வவுச்சரில் பதிவு செய்ய வேண்டிய போதும், 3 செயற்குழுக்களிற்குரிய சோளம் பயிச்செய்கைக்காக இரசாயன பசளை கொள்வனவிற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 70,487,891 பெறுமதியான கொடுப்பனவு வவுச்சர்களில் அவ்வாறு இருப்பு புத்தகத்தின் பக்க எண் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மாயாதுன்ன கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை இருப்பு புத்தகங்களில் பதிவு செய்து ஏற்றுக் கொண்டதாக உறுதி செய்து வவுச்சருடன் இணைத்திருக்காமை மற்றும் குறிப்பிட்டிருந்த விடயங்களை ஏற்றுக் கொள்வதாகவும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன் | |
| 18(5) பந்தி | கமநல சேவை செயற்குழு செயலாளரினால் குறைந்த பட்சம் மாதம் இரு முறையாவது காசுப் புத்தகத்தை சரிபார்த்து அதன் சரியான தன்மை தொடர்பில் திருப்தி அடைவதாக கையொப்பமிட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 ஆண்டில் சரி செய்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 21(2) பந்தி | கமநல சேவை செயற்குழு நிறைவேற்று செயலாளரினால் இரண்டு வாரங்களிற்கு ஒரு முறையாவது இருப்புப் புத்தகங்களை சரிபார்த்து அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானவையென திருப்தியடைந்து அவற்றில் அவர் கையொப்பமிட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 30(2) பந்தி | சொத்துக்கள் மற்றும் கடன் மீதிகளை உறுதி செய்ய கடனாளிகள் மற்றும் கடன் படுனர்களிடமிருந்து உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டிய போதும், அந்த உறுதிப்படுத்தல் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 2020 ஜுன் 25 திகதிய இலக்கம் 08/2020 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் சுற்றறிக்கை | 10 கமநல அபிவிருத்தி அலுவலர்கள், 11 கமநல சேவை ஆணைக்குழுவின் எழுதுவிளைஞர்கள் மற்றும் 108 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைக்க வேண்டிய போதும், பிணை வைத்திருக்கவில்லை. | குறித்த அலுவலர்களிற்காக பிணை வைப்புத் தொகை வைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2006 இன் 2.6 பிரிவு | 03 கமநல சேவை செயற்குழுக்களிற்குரியதாக ரூபா 788,000 பெறுமதியான கணனிகள் மற்றும் மின் பிறப்பாக்கிகள் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பரிந்துரையின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரியாக பெறுகைகள் நடைமுறையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

அம்பாறை மாவட்டத்தின் 26 கமநல சேவை செயற்குழுக்களிற்காக மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,403,773 ஆன இலாபமொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 21,278,898 தொகையானது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,124,875 ஆன வழர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு கமநல சேவை செயற்குழுக்களின் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமையும் ஏக்கர் வரி வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை முக்கியமான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 04 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 2021 ஆண்டின் போது ரூபா 858,476 செலவில் உற்பத்தி செய்திருந்த கொம்போஸ்ட் பசளை இருப்பு விவசாயிகளிற்கு விற்பனை செய்யப்படாது செயற்குழு வளவில் குவிக்கப்ட்டிருந்தது. | எதிர் காலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | குறைந்த பட்சம் கொம்போஸ்ட் உற்பத்திற்காக செய்யப்பட்ட செலவையேனும் மேவுகை செய்யும் வகையில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி திணைக்கள அம்பாறை மாவட்ட அலுவலகத்தினால் 2008, 2010 மற்றும் 2012 கால எல்லையினுள் தவணை கொடுப்பனவு அடிப்படையில் வழங்கியிருந்த 73 கை டெக்டர்களிற்காக 2022 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 9,992,106 ஆன தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை தவணை பணத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். | நிலுவை தவணை தொகையை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 25 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 01 ஆண்டு முதல் 32 ஆண்டு காலப் பகுதியினுள் பல தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக காணப்படும் ரூபா 87,443,659 பெறுமதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில மீதிகளிற்கான தகவல்கள் இல்லாததுடன் கண்டறிய முடியுமான மீதிகளை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த தொகையை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 25 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 01 ஆண்டு முதல் 26 ஆண்டு காலப் பகுதியினுள் முன் கொண்டு வரப்படும் ரூபா 234,294,532 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில மீதிகளிற்கான தகவல்கள் இல்லாததுடன் கண்டறிய முடியுமான மீதிகளை எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பானவ கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 2019 | ஏற்றுக் கொள்கிறேன். | குறித்த தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் அதிக விலையான பசளை கி.கி 427,250 இற்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,836,705 ஆன போதும், ரூபா 55,227 தொகை கூடுதலாக பசளைகள் கம்பனக்கு செலுத்தியிருந்த போதும் அக் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை மீள் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 03 கமநல சேவை செயற்குழுக்களின் கீழ் காணப்படும் 88 குளங்களின் குளக்கரை இரு பக்க பிரதேச விவசாயிகள் அனுமதியின்றி குடியிருப்பதன் காரணமாக குளக் கரைகளை அமைக்க இயலாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | அனுமதியின்றி குடியேறியுள்ள நபர்களிற்காக எதிர்காலத்தில் வழக்க தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி குளக்கரையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 02 செயற்குழுக்களினால் 2022/2023 பெறும் போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,683,500 பெறுமதியான பயோட்டீன் மற்றும் பயோ பூட் வகையிலான இயற்கை திரவ பசளை இருப்பை விவசாயிகள் எடுத்துச் செல்லாததால் செயற்குழுக்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றை மீண்டும் குறித்த கம்பனிக்கு திருப்ப அனுப்பி அக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த இருப்பை திரும்ப பொறுப்பேற்குமாறு குறித்த கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த கம்பனிக்கு திருப்ப அனுப்பி அக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2009/2010 பெறும் போகத்திற்காக பசளை போக்கு வரத்து செலவாக கமநல செலயற்குழுவினால் செலுத்தப்பட்ட ரூபா 1,782,435 தொகையை அச் சேவையை சரியாக மேற்கொள்ளாததன் மீது செயற்குழுவினால் குறித்த கம்பனியிடமிருந்து அறவிட்டு அப் பெறுமதியை மீண்டும் செலுத்த வேண்டியதாக நிதி நிலைமை கூற்றினுள் காண்பித்தருந்த போதும் அப் பெறுமதி தொடர்பாக 13 ஆண்டு காலத்தினுள் வேறு செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | தேவையான சீராக்கத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | சவலகட கமநல சேவை மத்திய நிலையத்திற்கு சொந்தமான பழுதடைந்த நிலையிலுள்ள 03 சிறிய குளங்கள் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக குளக்கரைகளை அமைத்து | பதில் வழங்கப்படவில்லை. | குறித்த குளங்களை மீள்திருத்தி விவசாயிகளிற்கு நலன்களை |

| | | | |
|---|---|---|---|
| | மீள்திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| (ஐ) | நெல் கொள்வனவு செய்யும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகித்த நெல்லிற்காக 2013 ஆண்டு முதல் உஹன கமநல சேவை செயற்குழுவிற்கு அறவிட வேண்டிய ரூபா 1,408,825 பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற் குறித்த விடயம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| (ஒ) | கமநல சேவை செயற்குழுவின் முன்னால் கமநல அபிவிருத்தி அலுவலர் ஒருவரிடமிருந்து அறிவிட வேண்டியதாக 2013 ஆண்டு முதல் கணக்கறிக்கைகளில் ரூபா 240,470 பெறுமதி குறிப்பிடப்பட்ட போதும் 2017 ஆண்டினுள் அவரிடமிருந்து ரூபா 6,480 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கக வேண்டும். |
| (ஓ) | பல்லன்ஓய கமநல சேவை செயற்குழுவின் முன்னார் எழுதுவிளைஞர் ஒருவரிமிருந்து அறவிட வேண்டியதாக 2011 ஆண்டு முதல் கணக்கறிக்கைகளில் ரூபா 500,226 பெறுமதி குறிப்பிடப்பட்ட போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை அத் தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | இது தொடர்பாக முன் நடவடிக்கை அம்பாறை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படும். | குறித்த தொகையை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| (கௌ) | 2022/2023 பெறும் போகத்திற்காக விவசாயிகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பசளைக்காக விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 373,710 தொகையை 2023 ஜுன் 30 வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை அறவிட குறித்த அலுவலர்களை அறிவூட்டப்பட்டது. | நிலுவை தொகையை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| (க) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் வரையறுக்கப்பட்ட இலங்கை பசளை கம்பனியினால் 14 கமநல சேவை செயற்குழுக்களிற்கு வழங்கியுள்ள ரூபா 15,649,098 பெறுமதியான சங்ஸ்தா எனும் திரவ பசளை இருப்பு காலாவதியாகியிருந்ததுடன் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது செயற்குழுவினுள் குவிக்கப்பட்டிருந்தன. | இவ் இருப்பை மீண்டும் எடுத்து செல்லுமாறு குறித்த கம்பனியை அறிவுறுத்தியுள்ளதுடன் இது தொடர்பாக கமநல அபிவிருத்த பிரதி ஆணையாளர் அவர்களையும் அறிவுறுத்தப்பட்டது. | தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | 2022 சிறு போகத்திற்காக இலவசமாக பகிர்ந்தளிக்க கமநல சேவை செயற்குழுவிற்கு கிடைத்திருந்த 1544 லீற்றர் உயிரியல் திரவப் பசளை கணக்காய்வு திகதி வரை களஞ்சியத்தினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அவ் இருப்பு காலாவதியாகியிருந்தது. | உயிரியல் திரவப் பசளைக்காக குழு அங்கீகாரத்தை பெற்று கம்பனிக்கு மீள் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கிறேன். | மீள் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |
| (கி) | 2022 சிறு போகத்திற்காக இலவசமாக பகிர்ந்தளிக்க கமநல சேவை செயற்குழுவிற்கு கிடைத்திருந்த 4,666 லீற்றர் உயிரியல் திரவப் பசளை கணக்காய்வு திகதி வரை செயற்குழு வளவினுள் வெட்ட வெளியில் வெயிலிற்கு மழைக்கு திறைந்ததாக விழைவற்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன், அவற்றை குறித்த நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பியிருக்கவில்லை. | உயிரியல் திரவப் பசளைகளை எடுத்துச் செல்லுமாறு குறித்த கம்பனி அறிவுறுத்தப்பட்டது. | மீள் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |
| (கீ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ரூபா 1,596,344 பெறுமதியான காலாவதியான மற்றும் சேதமடைந்த இருப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்து பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்காக நடவபடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | மீள் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |
| (கா) | கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 129,503 பெறுமதியுடைய காலாவதியான விவசாய இரசாயனம் மற்றும் பசளை இருப்பு தொடர்பாக கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் காலாவதியான விவசாய இரசாயனம் மற்றும் பசளை 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை பொருட் கணிப்பீட்டு சபைக்கு பொது 47 படிவத்தின் மூலம் அகற்ற கோரப்பட்டுள்ளதுடன் 2020.06.15 திகதி உதவி ஆணையாளர் அம்பாறை மூலம் இப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வினவப்பட்டுள்ளது. | காலாவதியான இருப்பை வழங்குனரிற்கு மீள் ஒப்படைக்க நடவடிக்கை விரைவில் எடுக்கக வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவை நிலையங்களிற்கு உரியதாக 2022/2023 பெறும் போகத்திற்காக விவசாயிகளிற்கு ஒரு | இந்த நிவாரண உதவியை செலுத்துவதற்காக விவசாயிகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடொன்றை | தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் உரிய நிவாரண |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கரிற்கு ரூபா 4,000 வீதம் கிடைத்த MOP பசளை நிவாரண உதவியை 2655 ஏக்கர்களிற்காக ரூபா 10,621,000 தொகை குறித்த விவசாயிகளிற்கு கிடைத்திருக்கவில்லை. | எமது அலுவலகத்தினால் வழங்கியிருந்த போதும், கொடுப்பனவு செய்யப்பட்டது திணைக்களத்தின் மூலம் ஆகும். | உதவியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்லன்ஓய கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான மொத்த வயல் காணியின் அளவு 5268 ஏக்கர்கள் ஆன போதும், வயல் காணிகள் பெயர் பதிவேட்டில் 3364 ஏக்கர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டு வயல் காணிகளின் மீள்திருத்த பணிகள் இந்த நாட்களில் நடைபெற்று வருவதுடன் அப் பணிகளின் முடிவில் முறையான பதிவேடொன்றை தயாரிக்கும் இயலுமை காணப்படுகின்றது. | மொத்த வயல் காணிகளின் அளவையும் வயல் காணி பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோமாரி மற்றும் பொதுத்துவில் கமநல சேவை செயற்குழுக்கள் இரண்டிற்கும் கிடைத்திருந்த ரூபா 8,000,000 பெறுமதியான நெல் விசுரும் 02 இயந்திரங்கள் 2021 ஆண்டிலிருந்து பிரயோசனப்படுத்தி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | அவ் இயந்திரங்களை உரிய பணிக்காக பிரயோசனப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 04 கமநல சேவை செயற்குழுக்களிற்கு சொந்தமான உறை தைக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் கொம்போஸ்ட இயந்திரம் போன்ற 09 இயந்திர உபகரணங்கள் 02 ஆண்டு காலப் பகுதியினுள் பயன்படுத்தி இருக்கவில்லை. | பயன்படுத்த முடியுமான உருப்படியை எதிர்காலத்தில் பயன்படுத்தவும் அவ்வாறு செய்ய முடியாத உருப்படியை பராதீனம் செய்யவும் நடவடிக்கை எடுக்கிறேன். | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனின் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | உஹன செயற்குழுக்களுவின் பொறுப்பிலுள்ள டெக்டர் வண்டி மற்றும் டேலரை பழுதுபார்த்து பயனபடுத்தாது 10 ஆண்டுகளாக செயற்குழு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | இந்த இயந்திர உபகரணங்களை பல அரச நிறுவனங்கள் கோரியுள்ள போதும் இதுவரை எழுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்காததுடன் பழுதுபார்த்து பயன்படுத்த எதிர்பாலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனின் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் கால வீச்சளவினுள் | இங்கு குறிப்பிட்டுள்ள பொருட்கள் | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் பல்லன்ஓா கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான 09 நீர் மோடார்கள் மற்றும் பிரதி எடுக்கும் இயந்திரத்தை பராதீனம் செய்ய தேவையான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | செயலிழந்துள்ளதால் பழுதடைந்த பொருட் பதிவேட்டிற்கு உப்படுத்தி 2019 ஆண்டு முதல் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளின் போது பொது 47 இற்கு உட்படுத்தி பராதீனம் செய்ய கோரிய போது பெறுமதி ரூபா 3,000 இற்கு அதிகமாகையால் பொருட் கணிப்பீட்டு சபைக்கு தீர்மானம் எடுக்க முடியாததால் தொடர்ந்தும் இந் நிலையத்தினுள் காணப்படுகின்றன. | அவ்வாறு செய்ய முடியாதெனின் வெளித் தரப்பினரிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பதியதலாவ கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான பின்வரும் பயன்படுத்த முடியாத சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>- 07 தளக் கலப்பை 01<br>- 09 தளக் கலப்பை 02<br>- சட்டிக் கலப்பை 02<br>- குபோட்டா டெக்டர் 01<br>- அருவி வெட்டும் இயந்திரம் 03<br>- டேலர் 02<br>- நீர் மோடார் 10 | இப் பொருட்களை பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்தி கிடைக்கும் இலாபத்தை விடவும் செலவொன்று பழுதுபார்த்தலின் போது இடம்பெறுவதுடன், வருடாந்த பொருட் கணிப்பீட்டின் போது பொது 47 மூலம் பராதீனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பயன்படுத்த முடியாத பொருட்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்ப |
| (ஊ) | தெஹிஅத்த கண்டிய செயற்குழுவிற்கு சொந்தமான 17 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை 02 ஆணடுகள் முதல் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயன்படுத்தாது காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் பயன்படுத்த முடியாத வாகனங்களை மற்றும் இயந்திர உபகரணங்களை ஏலத்தில் விற்க மற்றும் பழுபார்க்க முடியுமான வாகனங்களை மற்றும் இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்து பயன்படுத்த செயற்குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருட் கணிப்பீட்டின் போது ஒவ்வொறு ஆண்டும் பொது 47 மூலம் ஏலத்தில் விற்க கோரப்பட்டுள்ளது. | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனின் ஏலத்தில் விற்ற தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஒடானகம கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான 06 இயந்திர உபகரண உருப்படிகள் நீண்ட காலமாக பயன்படுத்தாது நிலைய வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன். | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு இல்லையெனில் பராதீனம் செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | | | தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2004 ஆண்டில் அம்பாறை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திலிருந்து பானம கமநல சேவை நிலையத்திற்கு கிடைத்த கிரேவிஸ் வகையான 09 நீர் உந்திகள் மீளாய்வாண்டு இறுதி வரை 17 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பிரயோசனப்படுத்தாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன். | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு இல்லையெனில் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | மாயாதுன்ன செயற்குழுவிற்கு சொந்தமான 2 நீர் உந்திகள், டெக்டர் ரொட்டரியொன்று, இரும்பு கொளுவி கலப்பையொன்று, கை டெக்டர் டேலரொன்று மற்றும் JT 0392 டேலரொன்றும் மீளாய்வாண்டு இறுதிவரை 11 ஆண்டுகள் வரையான காலமாக பிரயோசனத்திற்கு எடுக்காது செயற்குழு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்குழுவிற்கு சொந்தமாகவுள்ள பிரயோசனத்திற்கு எடுக்காது நிறுத்தி வைத்துள்ள பொருட்களை டென்டர் நடைமுறையின் கீழ் ஏலத்தில் விற்க எதிர்பார்ப்பதால் அந் நடவடிக்கைகளை மிக விரைவில் மேற்கொண்டு அவ் பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கிறேன். | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு இல்லையெனில் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மஹஓய மாவட்ட அலுவலகத்தினால் 2004 ஆண்டினுள் வழங்கியிருந்த 10 நீர் மோட்டார்களை நீண்ட காலமாக பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த 10 நீர் மோட்டார்களையும் பழுபார்த்து பயன்படுத்த முடியாத நிலைக்கு சேதமடைந்துள்ளன. அதன் காரணமாக 2022 பொருட் கணிப்பீட்டின் போது பராதீனம் செய்ய கோரப்பட்டுள்ளது. | சொத்துக்களை உரியவாறு பயன்படுத்த அல்லது அவ்வாறு இல்லையெனில் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | மாவட்ட அலுவலகம் மற்றும் 14 கமநல சேவை செயற்குழுக்களிற்கு சொந்தமான காணிகளின் உரிமையை கமநல சேவை செயற்குழுக்களிற்கு சுவீகரித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுவீகரித்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | உரிமையை சுவீகரித்துக் கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 10 கமநல சேவை செயற்குழுக்களில் 27 அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலகத்தில் 19 பேர்களாக 46 அலுவலர்களின் | பதில் வழங்கப்படவில்லை. | காணப்படும் மிகை ஊழியர் எண்ணிக்கையால் வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிட எண்ணிக்கையின் 39 அளவானது 14 கமநல சேவை செயற்குழுகளில் சேவையில் ஈடுபட்டுள்ள மிகை ஊழியர் எண்ணிக்கை மூலம் மேவுகை செய்து கொள்ள இயலுமை காணப்பட்ட போதும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | எஞ்சிய வெற்றிட எண்ணிக்கைக்காக அலுவலர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 29 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் தவிர 05 பதிவிகளிற்காக 25 அலுவலர்களின் மிகையும் மற்றும் 99 அலுவலர்களின் வெற்றிடங்களும் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | ஆளணியினர் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளவும் மிகை ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துக கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிகூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2022 சனவரி 11 திகதிய மற்றும் இலக்கம 7/5/12/கி.வா.பொ கொண்ட கடிதம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 16 (2) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 31 திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 27 கமநல சேவை செயற்குழுக்களினால் 58 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2023 மே 29 ஆம் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | மாவட்ட அலுவலகத்திற்கு 2023 மார்ச் 31 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்கு அறிக்கைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|---|
| (அ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 2012/04 இலக்க கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 2.6.2 (vii) பந்தி பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினால் பிரிவின் | காலாவதியான கடன் தொகையொன்று அறவிட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் காணப்பட்ட நிலுவை கடன் | காலாவதியான கடன்களை அறவிட துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளிற்கு விநியோகிக்கப்பட்டுள்ள கடன்களை உரிய கால நேரத்தில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காததனால் 10 கமநல சேவை நிலையங்களிகுரியதாக 1999 சிறுபோகம் முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரைய ரூபா 20,186,016 ஆன காலாவதியான கடன் தொகையொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | தெகையை அறவிட தேவையான சட்ட ரீதியான மற்றும் கடமை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக் தெரிவித்துக் கொள்கிறேன்.. | |
| (ஆ) | உஹான முன்னால் செயற்குழு எழுதுனரிடமிருந்து அறவிட வேண்டியதாக நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கையிறுப்பு தொகையான ரூபா 106,247 இனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னால் நிலைய எழுதுனரின் கையிறுப்பு தொகையை அம்பாறை மாவட்ட அலுவலகத்தினால் அறவிட்டுள்ளதுடன் பின்னர் அத் தொகையை தவறுதலாக பொது திறைசேரிக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்த போதும் இது வரை எமது நிலையத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 04/2012 கொண்ட கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 1.6 பிரிவின் பிரகாரம் கிராமப்புற விவசாயிகளின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொறு கமநல சேவை செயற்குழுக்களும் கமநல வங்கிகளை முறையாக பேனிசெல்ல வேண்டிய போதும் பல்லன்ஒய கமநல சேவை செயற்குழுவினால் 2009 ஆண்டின் பின்னர விவசாயிகளிடமிருந்து வைப்பு பணத்தை திரட்டிய போதும் கடன் வழங்குவதை மேற் கொண்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கமநல வங்கியை செயல்படு நிலைக்கு கொண்டு வர விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பதியத்தலாவ கமநல செயற்குழுவின் 2004 முதல் 2012 வரையான காலப் பகுதியில் கமநல வங்கியில் பணிபுரிந்த அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 466,432 தொயை அறவிடுவதற்கு 2023 ஜுலை 04 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து குறித்த தொகையை அறவிட தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பதியத்தலாவ கமநல செயற்குழுவின் சுழற்ச்சி நிதியத்தின் கீழ் 2002 ஆண்டு முதல் விவசாய அமைச்சுக்கு செலுத்த வேண்டிய ரூபா 740,120 பெறுமதியை தீர்க்கவும் அந்த நிதியத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 578,942 கடன் தொகையை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை கடனை அறவிட்டு அமைச்சகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள சிறு விவசாயிகளின் சேமிப்பு மற்றும் முதலீட்டு ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன் கமநல வங்கிகள் நிறுவப்பட்டுள்ள போதும தெஹிஅத்தகண்டிய கமநல செயற்குழு அதிகார பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய குடும்பங்கள் 10,752 அளவிலிருந்து கமநல வங்கியுடன் தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் செய்யும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 300 அல்லது 3 சதவீதம் மாத்திரமான மிக குறைந்த பெறுமானமானதுடன் அங்கத்தவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கமநல வங்கி மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை 2019/2020 ஆண்டில் செயற்படுத்தியதுடன் மீண்டும் மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டங்களை செயல்படுத்த எதிர்பார்க்கிறேன். | அங்கத்தவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (எ) | சிறு குழுக்களை அமைத்தல், மேம்படுத்துதல், செயற்படும் குழுக்களாக பேணிக் கொள்ளல், கமநல வங்கியுடன் தொடர்ச்சியாக பங்குபற்றச் செய்தல், அங்கத்தவர்களின் நிதியத்தை ஆரம்பித்து வளர்த்தல் மற்றும் இயக்குதல் பிரிவிற்கு பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களின் பொறுப்பான போதும் தெஹிஅத்தகண்டிய கமநல வங்கியின் மீளாய்வாண்டினுள் பதிவு செய்த 42 சிறு குழுக்களிலிருந்து வைப்பு பணமாக ரூபா 74,000 ஆன தொகையொன்றை மாத்திரம் திரட்டியிருந்ததுடன் அது மிகக் குறைவான பெறுமானமானது. | 2022.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 542,377 ஆன மீதியொன்று காணப்படுவதுடன் கடன் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் சிறு குழக்களின் அளவை அதிகரிக்கவும் வைப்புத் தொகையை அதிகரிக்கவும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களின் பங்களிப்பினூடாக நடவடிக்கை எடுக்கிறேன். | வைப்புக்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 கொண்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1.6 பிரிவின் பிரகாரம் கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்கில் ஒவ்வொரு | பதில் வழங்கப்படவில்லை. | கமநல வங்கியை செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கமநல நிலையங்களும் கமநல வங்கிகளை முறையாக பேணிக் கொள்ள வேண்டிய போதும் நாமல்தலாவ கமநல சேவை நிலையத்தினால் 2003 ஆண்டின் பின்னர் விவசாய மக்களிற்கு கடன் வழங்கியிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு கமநல வங்கி செயற்படாது நிலவிய காலம் 20 ஆண்டுகளிற்கு கிட்டியதாக இருந்தது.